உ

ஸ்ரீ கணேசாய நம:

சக்கந்தி

ஸ்ரீ கைலாச கணபதி ஆலயதுதி

ஆசிரியர்

சி. சுப்பையா சுவாமி.

ப[illegible]ளர்

சக்க[illegible]

உ.லெ. க. கண. கபி. குடும்பத்தார்.

1944.

3-2

உ

சிவமயம்

சக்கந்தி
ஸ்ரீ கயிலாச கணபதி ஆலய துதி.

இது

ஸ்ரீ சிதம்பரஞானதேசிக சுவாமிகள்

மாணாக்கர்

சி. சுப்பைய சுவாமிகளால்

இயற்றப்பெற்று

★

சக்கந்தி

உல. சு. கண. கயி[illegible]

காரைக்குடி

"ராஜாஜீ பிரஸில்" பதிப்பிக்கப்பெற்றது

★

1944

தாரண௵ ஆனிமீ 1உ

உ

சிவமயம்

முகவுரை.

தேன்போலு மினிய செந்தமிழ் வழங்கும் பாண்டி நன்னாட்டிலே தனவைசியர் நகரங்களில் (சிவகங்கைக்கு அருசாக) சக்கந்தி யென்னும் நகரமொன் றிருக்கிறது. அங்கு தொன்றுதொட்டு வாழையடி வாழையாய் வாழ்ந்துவருகின்ற உல. க. கண. கயி. என்னும் விலாசமுடைய பழங்குடியிற் பிறந்தவராகிய **உயர் திருவாளர் சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களும்,** (ஸ்ரீ கோவிலூராதீனம் சிதம்பரம் பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் மடம் சிதம்பர ஞானதேசிக சுவாமிகள் சீடர் திருவண்ணாமலை ஈசான்யமடம்) **சி. சுப்பைய சுவாமிகள் அவர்களும்** யானும் ஆகிய மூவர்களும் ஓரிடத்தில் சிலகாலந் தங்கி வாசஞ்செய்ய நேர்ந்தது.

அச்சமயம் திருவாளர் செட்டியாரவர்கள், ஸ்ரீ சுவாமிகளது சில வார்த்தைகளால், மேதக்கவொரு பெரியார்தான் எனத் தெரிந்து, சுவாமிகளிடம் **"யாங்கள் உய்யும் வண்ணம் நீதிகளைச் சொல்ல வேண்டும்."** என்று கேட்க, அவ்வாறே சுவாமிகள் புருஷார்த்தத்திற் கேதுவான நீதிவாக்கியங்கள்,

(வடமொழி தென்மொழித்) தோத்திரப்பாடல்கள் இவைகளைத் தினந்தோறும் எடுத்துச் சொல்லுவார்கள். அதைக்கேட்டுச் செட்டியாரவர்கள் மிகவும் சந்தோஷிப்பார்கள்.

இவ்வாறு நிகழ்ந்துவர, ஒருநாள் செட்டியாரவர்கள் ஸ்ரீ சுவாமிகளவர்களிடம் "எங்கள் ஊரில் நாங்கள் பூசித்து வரும், ஸ்ரீ கயிலாசகணபதி திருவாலயத்தில் அமைந்துள்ள எல்லா மூர்த்திகள் பேரிலும், தோத்திர ரூபமாகச் சில பாடல்கள் திருவாய்மலர்ந்தருள வேண்டும் என்றும், அப்பாடல்களில் (எங்களுக்கு முன்னர் வேண்டப்படும்) அறம், பொருள், இன்பங்களை வேண்டிக் கொள்வதாக அமைத்துத்தரவேண்டும் என்றும்" கேட்டுக் கொண்டார்கள்.

சுவாமிகள் செட்டியாரவர்களது வேண்டுகோட்கிணங்கி, கலித்துறையும் எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்களும், அறுசீர்விருத்தமும், வெண்பாவும் விரவிய பதினாறு பாடல்கள் பாடி, அதற்கு **சக்கந்தி ஸ்ரீகயிலாசகணபதி ஆலயதுதி** என்று பெயரிட்டுக் கொடுத்தார்கள்.

அதில், முற்கூறிய மூன்று புருஷார்த்தங்களையன்றி, (தட்சிணாமூர்த்தி துதியில்) வீட்டின் வேண்டுகோளும் அமையப்பெற்றிருக்கிறது. அதை அச்சியற்றிப் பார்க்குமுன்னமே செட்டியார் அவர்கள் தமது வயோ

நிகத்தால் சிவபதம் பெறவே, பின்னர் அன்னவர் குடும்பத்தார்கள் "எங்கள் முன்னோர் எண்ணத்தைப் பூர்த்தி செய்வது எங்கட்குரிய கடமைதானே" என்று சுவாமிகள் மூலமாகவே அச்சிட்டார்கள்.

இது நூலளவிற் சிறியதேயாயினும், தமிழை வளர்க்கும் பதங்களும், பொருட்செறிவும் அமைந்து, கவின்றோர்க் கினிமைபயப்பதோடு, இறைவனருளையும் பெறக் காரணமாக விருப்பதால், இதைப் பாராயண முறையில் வைத்துப் பாடுவோர்களை ஸ்ரீ மீனாட்சியம்மை சமேத சுந்தரேசர் காத்தருள் புரிவாராக.

சுபம்!

இங்ஙனம்,

கோ. ம. சோமசுந்தரம்.

உ

கணபதி துணை.

சக்கந்தி

கயிலாச கணபதி ஆலய துதி

காப்பு.

கட்டளைக் கலித்துறை.

சீர்தங்கி யோங்கு செழுந்தமி
மூற்றுதி செய்யவென்பாற்
கார்தங்கு மேகம் பொழிவது
போலக் கருணைதரும்
ஏர்தங்கு திங்களுங் கங்கையும்
வாழ்சடை யெந்தையருள்
கூர்தங்கு வெண்மருப் பொன்றுடை
யைங்கரக் குஞ்சரமே. 1

கயிலாச கணபதி துதி

நன்னலம் பெருகு நினதடி நினைந்து
நாடொறும் வழுத்திட வருள்வாய்
பொன்னமர் மரும மாதவன் சீர்த்தி
பொருந்துமா பாரதக் கதையை
நின்றொரு கோட்டான் மேருவின் வரைந்த
நிமலனே சக்கந்தி நகரில்
மன்னுகை லாச கணபதி மணியே
மாமுக வமுதமே நிதியே. 2

மிக்கபே ரழகுங் கற்பும்வாய்ந் தொழுகு
மிளிர்மணிக் குழைமட வாருந்
திக்கெலாம் பரவு சீலமார் சுதருந்
தீஞ்சுவை யமையுமா ரமுதுந்
தக்கவா ளுளுந் திருமக ளருளுஞ்
சார்தர வெமக்கருள் புரிவாய்
சக்கந்தி நகரின் மிளிர்கயி லாசத்
தந்தியே யெந்தையைங் கரனே. 3

சுந்தரேசர் துதி

மங்களத் திருவே முதற்பல பொருள்கள்
வானவர்க் குவப்புட னளித்துச்
செங்களங் கறுப்பக் கரளம நயின்ற
தெய்வநீ யென்றுனை யடைந்தோம்
எங்களுக் கிம்மை மறுமையின் மேலு
மெழுமையுஞ் சுகநிலை யருள்வாய்
துங்கமுற் றொளிருஞ் சக்கந்தி நகர்வாழ்
சுந்தர சிற்பர சிவமே. 4

விரும்பியே நூறு பரிமக மியற்றி
மேவுறு மகபதி முதலோர்
அரும்பெரும் வெறுக்கை துரும்பென லாக
வரியநின் னருட்டிருப் பூசை
புரிந்திடு பாணன் பெருந்திரு வடைந்தான்
பூசைசெய் பேறெமக் கருள்வாய்
சுரும்பிமிர் வனஞ்சூழ் சக்கந்தி நகர்வாழ்
சுந்தர சிற்பர சிவமே. 5

அண்டர்கள் பரவு நினதடிப் பணியா
　　லையிரு முகந்தினன் வாழ்வைக்
கொண்டுமுன் குலுங்கக் கயிலையை யெடுத்துக்
　　கொதிபொரு திறைஞ்சலு மளியான்
மண்டுபே ருவகை கொண்டனை திருவும்
　　வழங்கினை சக்கந்தி நகரிற்
றெண்டுசெய் யாமும் வாழ்வுற வருள்வாய்
　　சுந்தர சிற்பர சிவமே. 6

மீனாட்சியம்மை துதி

குழவிவெண் டிங்கண் முடிக்கணி குழகன்
　　கொடுத்தசெந் நெல்லிரு நாழி
விழைவுட னேற்றெண் ணான்கறம் வளர்த்தாய்
　　வியனிலம் பிறந்துனை வழுத்தும்
மழவரா மெமையுங் காத்தருள் புரிதல்
　　மாசிலா நின்கட னமால்
விழவறு வோசை மேவுசக் கந்தி
　　விளங்குமீ னாட்சியம் பிகையே. 7

அறிவருந் திருவுங் கல்வியு முணர்வு
மடைவுட னடைதர வருள்வாய்
செறிமது மரைமின் நாமகள் பரவத்
திகழ்தரு மளிவடி வாகிப்
பொழில்வழிந் தொழுகு மதுவினால் விளையும்
பொருவறு கழனிக ணிறைந்தே
எழில்புரி செல்வச் சக்கந்தி நகர்வாழ்
எங்கண்மீ னாட்சியம் பிகையே. 8

எல்லையி லாண்டு விறுபல் லண்டத்
திருந்தவா னமரர்க ளெவரும்
எல்லிடு நினது கடைவிழி நோக்கா
லிருநிதிச் செல்வர்க ளானார்
வில்லிடுங் குழையா யவ்வணம் யாமு
மிகுபொரு ளடைதர வருள்வாய்
நல்லவ ருறையுஞ் சக்கந்தி நகர்வாழ்
நங்கைமீ னாட்சியம் பிகையே. 9

நடராசர் துதி

நீண்டநாள் வாழும் வாழ்க்கையும் மொய்ம்பு
நிலைக்கநோய் நீங்கிய வுடலும்
வேண்டிய போகம் யாவையு மெமையே
விரவிட வருள்புரிந் திடுவாய்

ஆண்டவ னாகி யைந்தொழில் விரியு
மாடலைச் சக்கந்தி நகரிற்
காண்டகப் புரியு நடனநன் மணிநின்
கழல்கருத் திருத்தின நன்றே. 10

தக்ஷிணாமூர்த்தி துதி

சந்தத முலகி லிந்திர னிகராய்த்
தருக்குநற் செல்வம திந்து
முந்தைநா ளாலின் கீழொரு நான்கு
முனிவருக் கருளிய நிலையும்
வந்தெமக் கருளி வாழ்தரப் புரிவாய்
மாடமா ளிகைமிக வோங்கிச்
சந்திரற் றோயுஞ் சக்கந்தி நகர்வாழ்
தக்ஷிணா மூர்த்தியே சிவமே. 11

தண்டாயுதபாணி துதி

விண்ணவர் கலங்கி நின்றிரு முன்பு
மேவிநின் றுரைசெய வசுரர்
துன்னெனக் கூர்வேல் விடுத்தழித் தமரர்
துயர்கெடுத் தாண்டமெய்த் தோன்றல்
எண்ணருந் தனமே தானியங் கல்வி
யிபம்பசு யாவையு மருள்வாய்
தண்ணமர் பொழில்சூழ் சக்கந்தி நகர்வாழ்
தண்டபா ணிப்பரம் பொருளே. 12

நாராயணமூர்த்தி துதி

தானம தாகும் பாற்கட லொருவித்
　　தரணிவந் தன்புடை யெவர்க்கும்
மானமுங் குலமுங் கல்வியும் பொருளும்
　　மனங்கவர் மனைமகப் பேறுந்
தானமு முயல்வுந் தருநல்போ லெமக்குந்
　　தந்தருள் புரிகுவாய் தழைக்க
வானவர் விரும்புஞ் சக்கந்தி வாழும்
　　மாதவா நாரண மணியே. 13

சரஸ்வதி துதி

அறுசீர் விருத்தம்.

பார்பூத்த முடிச்சேடன் பரந்ததமிழ்க்
　　குறுமுனியென் பலரும் போற்ற
பேர்பூத்த வடமொழியுந் தமிழ்மொழியு
　　மெமக்குநனி பெருக நல்காய்
யேர்பூத்த திசைமுகனுப் பஞ்சரத்து
　　ளிருந்தொளிரு மினிய கிள்ளாய்
சீர்பூத்த சக்கந்தி வாழ்தருநற்
　　சரஸ்வதியே தெய்வ மாதே. 14

சண்டேசர் துதி

மங்கைபங் குடைய வீசன்
வதிதருங் கோயில் புக்கங்
கங்கையி னருச்சித் தேத்தி
யன்புகொள் வழிபாட் டிற்காந்
துங்கமெய்ப் பயனை யீவான்
தூய சக்கந்தி வாழும்
சங்கர னிகர்சண் டேசர்
நாண்மலர் பணிகு வாமால். 15

வாழ்த்து

வெண்பா.

வாழ்க பசுக்கூட்டம் வாழ்கமறை யோர்மறையும்
வாழ்கவிறை மேகம் மழைவழங்கி—வாழ்கநல்ல
மக்கள் மனைசெல்வம் வாணாளுங் கொண்டுநிதஞ்
சக்கந்தி வாழ்க தழைத்து. 16

சக்கந்தி கயிலாச கணபதி ஆலய துதி
முற்றிற்று.